www.agaram.lk

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 6 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ........................................................................................

**பகுதி - I**

❖ **சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. "இனி அந்தச் செல்வனின் கொடுமை இருக்காது; மகிழ்ச்சியாக வாழுங்கள்" இங்கு மகிழ்ச்சி என்பதன் ஒத்த பதம்.
1) ஆனந்தம் 2) ஆசை 3) கவலை 4) கலக்கம்

02. நீ எழுதிய மடல் கிடைத்தது. இங்கு மடல் என்பதன் ஒத்த பதம்.
1) தண்டு 2) திருமுகம் 3) கவிதை 4) கட்டுரை

03. மந்திகள் மருதமர நிழலில் குந்தி காவடியெடுத்து ஆடுகின்றன. இங்கு மந்தி என்பதன் எதிர்ப்பாற் சொல்.
1) பெண்குரங்கு 2) பிடி 3) கடுவன் 4) களிறு

04. கடவுள் இல்லை எனக் கூறுபவன்.
1) நாத்திகன் 2) ஆத்திகன் 3) அறிஞன் 4) பக்தன்

05. பின்வருவனவற்றுள் இடையின மெய்யெழுத்துக்கள் கொண்ட தொகுதி
1) அ, இ, உ, ஓ 2) க், ச், ட், த், ப், ற் 3) ய், ர், ல், வ், ழ், ள் 4) ங், ஞ், ண், ந், ம், ன்

06. கண்ணன் ஓவியம் வரைந்தான். இவ்வாக்கியத்தின் எழுவாய்
1) கண்ணன் 2) ஓவியம் 3) வரைந்தான் 4) வரை

07. ஐயோ! பாவம்! இவன் நல்லவனாயிற்றே! இவ்வாக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள நிறுத்தற்குறி,
1) வினாக்குறி 2) உணர்ச்சிக்குறி 3) அடைப்புக்குறி 4) மேற்கோட்குறி

08. பின்வருவனவற்றுள் தன்மை ஒருமையாக அமைவது,
1) நான் 2) நாங்கள் 3) நீ 4) நீங்கள்

09. நான் சோறு சாப்பிட்டேன். இவ்வாக்கியம் உணர்த்தும் காலம்.
1) தற்காலம் 2) இறந்தகாலம் 3) எதிர்காலம் 4) நிகழ்காலம்

10. பூக்களில் இருந்து கமகம என மணம் வீசியது. இங்கு கமகம என்பது,
1) இணைமொழி 2) அடுக்குத்தொடர் 3) இரட்டைமொழி 4) அடுக்கிடுக்குத்தொடர்

11. மரத்திலுள்ள கனிகள் ஒவ்வொன்றும் ....................
1) அழகானவை 2) இனிமையானவை 3) இனிமையானது 4) இனிமையற்றவை

12. பின்வருவனவற்றுள் பெயர்த்தொடராக அமைவது,
1) படித்தான் 2) சிரித்தான் 3) கண்ணன் 4) வந்தான்

13. சிங்கம், வண்டு, விஷ்ணு என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்.
1) அறி 2) அரி 3) கரி 4) கறி

14. வன்மை, வண்மை எனும் சொற்கள் முறையே குறிப்பது,
1) திறமை, கொடை 2) வலிமை, வண்மை
3) கொடை, திறமை 4) வாண்மை, வலிமை

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

15. பூ + சோலை என்பதனைச் சேர்த்து எழுதும்போது வரும் சொல்.
    1) பூசோலை 2) பூந்சோலை 3) பூஞ்சோலை 4) பூட்சோலை

16. சந்தர்ப்பம் அமையும்போது பயன்படுத்திக் கொள்ள வேண்டும். என்னும் கருத்தைப் புலப்படுத்தும் பழமொழி.
    1) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு 2) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
    3) ஆறிலும் சாவு நூறிலும் சாவு 4) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

17. ஏமாந்த நாய் என்ற கதையின் ஆசிரியர்,
    1) செ. கணேசலிங்கன் 2) நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
    3) பேராசிரியர் சோதி 4) கோகிலா மகேந்திரன்

18. காலையும் மாலையும் கடவுளை வணங்கு என்பது,
    1) ஏவல் வாக்கியம் 2) வினா வாக்கியம்
    3) கூற்று வாக்கியம் 4) மெய்ப்பாட்டு வாக்கியம்

19. மானின் இளையது குட்டி என்பது போல சிங்கத்தின் இளையது,
    1) பேத்தை 2) குருளை 3) குட்டி 4) பிள்ளை

20. இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா.
    1) பொன்விழா 2) வைரவிழா 3) வெள்ளிவிழா 4) அமுதவிழா

($20 \times 1\frac{1}{2} = 30$ புள்ளிகள்)

**பகுதி - II**

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01.** பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.
1. நான் விரும்பும் பெரியார்
2. சூழலைப் பாதுகாப்போம்
3. உடைந்த கைத்தொலைபேசியின் சுயசரிதை
4. ஒழுக்கம் உயர்வு தரும்

(18 புள்ளிகள்)

**02.** உமது பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா பற்றி 75 சொற்களுக்கு குறையாமல் உமது நண்பனுக்கு கடிதம் ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

**03.** பின்வரும் வினாக்களில் எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

01. ஈ.்.பாண்டியின் நற்பண்புகள் எவை?
02. சேவல் பூனைக்கு கூறிய அறிவுரை யாது?
03. காக்கையிடம் காணப்பட்ட நல்லபழக்கம், தீயபழக்கம் எவை?
04. சரிவிகித உணவு என்றால் என்ன?
05. மோவாஸ் பறவையின் முட்டை ஓடு எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?
06. பறவைகள் பலவிதம் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?
07. தனிவாக்கியத்திற்கு இரு உதாரணம் தருக.
08. கரை என்னும் சொல் பெயராகவும் வினையாகவும் வரும் வகையில் வாக்கியம் எழுதுக.

($6 \times 2 = 12$ புள்ளிகள்)

**04.** பின்வரும் சொற்களை அவற்றின் பொருள் விளங்கும் வகையில் வாக்கியம் அமைக்குக.
1. வெல்லம் 2. கனி 3. மெல்ல மெல்ல
4. வெள்ளம் 5. கணி

($5 \times 2 = 10$ புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

**05.** பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

அந்தக் காட்டில் பல மரங்களும் செடிகளும் நிறைந்து நின்றன. அவை நிழலையும் குளிர்ச்சியையும் தந்தன. அந்த இயற்கை அழகை மான்குட்டி நன்றாக இரசித்தது. மரங்களிலும் செடிகளிலும் மஞ்சள், சிவப்பு, வெள்ளை போன்ற பல நிறப்பூக்கள் மலர்ந்திருந்தன. அப் பூக்களில் இருந்து கமகம என்று மணம் வீசியது. அந்த வாசனை எல்லோரையும் களிப்பூட்டியது. அந்தவேளையில் ஒரு சிங்கத்தின் கர்ச்சனை கேட்டது. மான் குட்டிக்குப் பயம் உண்டானது. சிங்கத்தின் சத்தம் கேட்ட திசையைத் திரும்பிப் பார்த்தது.

01. காட்டில் நிறைந்து நின்றவை எவை?

02. இதில் வரும் இரட்டைக்கிளவி சொல் ஒன்றை எழுதுக.

03. மான்குட்டி பயந்தமைக்கான காரணம் யாது?

04. மானின் இளையது எவ்வாறு அழைக்கப்படும்?

05. பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
1. களிப்பு 2. மணம்

(5x2 = 10 புள்ளிகள்)

**06.** பின்வரும் வாக்கியங்களை வழு நீக்கி எழுதுக.

01. மல்லிகை மொட்டுக்கழால் மாளை தொடுத்தாள்

02. நதிக்கறையில் பரவைகளது கூட்டம் காணப்பட்டது.

(5 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk